## முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## அ.வ.எண்.118/2018

2025–ம் வருடம் அக்டோபர் திங்கள் 30–ம் நாளன்று 94 வது பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.24–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : **சித்ரா** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் 94 வது பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். 94 வது பிரதிவாதி சித்ரா பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.131 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 15.12.2008 ஆம் தேதிய 94 வது பிரதிவாதி சித்ரா பெயரிலான கிரைய ஆவணம் எண்.7793/2008 சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.132 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 29.10.2025 ஆம் தேதிய ரவிச்சந்திரன் பெயரிலான வில்லங்க சான்றிதழ் நகல் (ஆவண எண்.927/2008) ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.133 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) கடந்த 29.10.2025 ஆம் தேதிய

94 வது பிரதிவாதி சித்ரா பெயரிலான வில்லங்க சான்றிதழ் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.134 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வில்லங்க சான்றிதழ் முழுமையாக இல்லாததால் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) கடந்த 30.10.2025 தேதியிட்ட 94 வது பிரதிவாதி சித்ரா பெயரிலான தனிப்பட்டா எண்.1417 ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.135 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.10.2025 தேதியிட்ட 94 வது பிரதிவாதி சித்ரா பெயரிலான அ–பதிவேடு ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.ஆ.136 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.10.2025 தேதியிலான மனை சர்வே எண்.26/2 பி1 ஏ 2 ன் புலஎண் வரைபடம் ஆன்லைன் பதிவிறக்கம் பி.வா.சா.அ.137 ஆக குறியிடு செய்யப்படுகிறது. வாதிகள் தாக்கல் செய்த வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1 முதல் 6, 8 முதல் 15, 18, 19, 21 முதல் 40, 42 முதல் 46, 48 முதல் 50, 52 முதல் 58, 60, 62, 64, 65, 67, 68, 69, 70 முதல் 75 முதல் 87, 89 முதல் 100, 102, 104 முதல் 105, 107, 114, 115 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சொந்த ஊர் மணல்மேடு. நான் தற்போது வையாபுரிநகரில் குடியிருந்து வருகிறேன். வையாபுரிநகரிலிருந்து தும்பிவாடி கிராமம் சுமார் 10 கிலோமீட்டர் தொலைவு இருக்கும். தும்பிவாடி கிராமத்தில் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் பூர்வீக வகையில் எந்த சொத்துக்களும் இல்லை. 106 நபர்கள் கிரையம் பெற்றதற்காக நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.132 மூலம் நீங்கள் வாங்கிய கிரையபத்திரத்தை பி.வா.சா.ஆ.8 ன் அடிப்படையில் எழுதிக்கொடுத்த ரவிச்சந்திரனுக்கே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் உரிமையில்லை என்பதால் பி.வா.சா.ஆ.132–ன் கீழ் உங்களுக்கு கிரையம் எழுதிக்கொடுப்பதற்கு

ரவிச்சந்திரனுக்கு சட்டப்படி உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல சட்டப்படி உள்ள ஆவணங்களை பார்த்து நான் கிரையம் வாங்கினேன். நீங்கள் வாங்கிய பி.வா.சா.ஆ.132 கிரையம் செல்லாததால் அதன் அடிப்படையில் வாங்கிய பி.வா.சா.ஆ.135 தனிப்பட்டாவும் செல்லாது என்று சொன்னால் சரியல்ல. நான் வில்லங்க சான்றிதழ், பட்டா ஆகியவற்றை பார்த்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். வில்லங்க சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனே். பி.வா.சா.ஆ.134 கிரையம் வாங்கும் போது பார்த்த வில்லங்கசான்றிதழ் ஆகும். வில்லங்க சான்றிதழ், புலவரைபடம் எங்கிருந்து எடுத்தீர்கள் என்றால் என்னுடைய கைபேசியிலிருந்து எடுத்தேன். நீங்கள் தாவா சொத்தில் அனுபவித்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல வாரத்தில் 3 நாட்கள் தாவா சொத்திற்கு செல்வேன். வழக்கிற்காக தாவா சொத்திற்கு வாரத்திற்கு 3 நாட்கள் செல்வேன் என்றுபொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. நான் வாங்கிய சொத்திற்கு நான்கெல்லைகள் எனக்கு தெரியும். 73, 74 மனைக்கு தெற்கிலும், 125 மனைக்கு மேற்கிலும், தென்வடல் ரோட்டுக்கு கிழக்கிலும் நான் வாங்கிய சொத்து அமைந்துள்ளது. நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க யார் உங்களை அழைத்து வந்தார்கள் என்றால் வழக்கறிஞர் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.